तुण्डी सर्पमनोरम्या ताम्रा कस्तूरिकाप्रिया ।
कोमलाङ्गी सुनेत्रा च अलाबूस्तनमण्डिता ॥

सर्वमङ्गलसौभाग्या[1] मधुरध्वनिरुत्तमा ।
कर्पूरामोदनिःश्वासा सर्वावयवसुन्दरी ॥

चपलाङ्गी (चञ्चलाङ्गी) सुनयना नीलोत्पलतनुः कृशा ।
रागिणी वीचिका ज्ञेया पद्मकुड्मलकस्तनी ॥

वेला दीर्घध्वनीकाम्या मुक्ताहारविभूषणा ।
मुकुटिमेखलायुक्ता विशालहृदयानघा ।

1. मङ्गलकोशिढयेति द्दष्ठ्यम्

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

माद्गुली शङ्खहस्ता च नखकेशसुशोभना ॥
दाडिमोष्ठी ह्रस्वकुचा कम्बुकण्ठी सुशोभना ॥

डोम्बी कृष्णा महादीर्घा लोलनेत्रा घटस्तनी ।
काकस्वरा खराक्रान्ता मद्यपानपरायणा ॥

सुनाभिः शुभवक्त्रास्यान्मेघध्वनि[1]तडित्प्रभा ।
स्मेरास्या काममेषाढ्या शुभ(भुज) पल्लवमण्डिता ॥

अमृतानन्दसन्तुष्टा मृतसञ्जीविनी मता ।
चतुर्भुजा वृत्तकुचा देवानां प्रीतिवर्धनी ॥

अर्धावेधरणी(?)प्रोक्ता स्थिराकुम्भ करावरा (नागधन्वा) ।
पृथूरोजा गुहानाभिर्वरारोह विशालदृक् ॥

सुधामयी सुधारा च सुधापानवती शुभा ।
सुधाकलशहस्ता च रागिण्यमृतवर्षिणी ॥

त्रिवली त्रिमुखी प्रोक्ता त्रिस्वरा त्रिपदी त्रिधा ।
त्रिणेत्रा त्रिस्तनी श्यामा त्रिवर्णप्रेमवर्धिनी ॥

फलश्रुतिः

रागस्नुषा स्मृता एताः ज्ञातव्या रागकोविदैः ।
एतास्संज्ञानमात्रेण गन्धर्वसदृशो भवेत् ॥

॥ इति रागरत्नाकरे गन्धर्वराजविरचिते ॥
॥ रागस्नुषावर्णनम् ॥

---

1. मेघरञ्जिकेति द्रष्टव्यम् ॥

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

॥ अथोपरागाः ॥

श्रीगिरिः कामपीठश्च चेलपिञ्जरिक(पिञ्जारक)स्तथा ।
श्यामला पाण्डरागश्च फेनलः करवीरजः ॥

पारदः पारवीरश्च काफी चैन दु(वमु)सैनिकः ।
पाराशारिन्दुकः कङ्को (विल्वकः) कोङ्कणस्तथा ॥

सिन्धुः जोमपरागश्च पार्वतीयो धराधराः ।
गङ्गासागररागश्च नवरागस्तथैव च ॥

कीटकः श्रृङ्खलाबन्धो राजधानी द्विजेरितः ।
धुरतः(कः) कमठो योगी हंसो मारीचकस्तथा ॥

कैवर्तो धीरधन्वा च कारुः (कि) कङ्कण इत्यपि ।
इत्येते उपरागश्च कथिताः शङ्करेण वै ॥

सप्तभिः स्वरैर्गायन् रागज्ञानविचक्षणः ।
सर्वान्कामानवाप्येह शिवेन सह संवसेत् ॥

षड्भिः स्वरैश्च यो गीते स रागः षड्जवत्स्मृतः ।
यः स्वरैः पञ्चभिर्गायन् पाण्डवः परिकीर्तितः ॥

रागं साधारणं गायन् व्याकल्पान्तरितस्वरैः ।
न्यायादिभिः स्वरालापैः शुद्धरागः प्रकीर्तितः ॥

श्रुतिशुद्धा स्थानशुद्धा जातिशुद्धा त्रिधा मताः ।
ग्रहसन्न्याससंयुक्ताश्चान्यथा कीर्तिता बुधैः ॥

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

ग्रहसन्याससन्यासी स सन्यासकपञ्चमः ।
यो विजानाति रागज्ञो गन्धर्वज्ञो विचक्षणः ॥

स्वराणाममि सप्तानां क्रमाच्चत्वार एव हि ।
स्वादुसंचारणश्चैव तथाऽऽरोहावरोहणे ॥

मध्यमग्रामसंभूता मयमात्राग्रहान्विता ।
मध्यमागीतकस्यैता(षा) श्रीरागे विनियुज्यते ।

मा पा मा म पा पा नि पा मा म ग रि सा स नः ।
(सा पा मा स मा पा पा नि पा मा मा ग रि सा स नः – धा सा सा)
धा सा सा इति ज्ञेया ग्रामसङ्ग्रम (ग्राममध्यम) संज्ञकाः ॥

भिन्नषड्जसमुद्भूतो सन्यासोऽथ ग्रहासि(शि)कः ।
समशेषग्रहाः प्रोक्ताः प्रवसंख्येव भैरवः ॥

धा पा ग मा म धा नि स नि धा गा मा ध नी स गाः ।
स न्नि धा गा ध नी नी श्च षड्जग्रामः क्रमात्स्वराः ॥

भैरवः शुद्धपञ्चस्तु कौशिको ललितो मतः ।
ग्रहसन्यास षड्जा सा को वा [गोत्रा] वीर वियोजिताः ॥

व अ भ प्रभवा धा सा ग्रहन्यासा सधैवता ।
वेळावळी भोगधारी विप्रलम्बे न उच्यते ॥

षड्जग्राम भ वा धा सा षड्जन्यासग्रहान्विता ।
स तार धैवतो मन्द्रो मध्यमान्यासमस्वराः ॥

CC-0.TSarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

षड्जग्राहश्च सन्यासी गान्धारस्वरवर्जितः ।
ऋषभो मुनिमार्गेन षड्जमादिविवर्जितः ॥

आन्दोलीतन्नवस्थाने मध्यमादिविलम्बितः ।
मध्यमः पञ्चमश्चैव नित्यं भवति कम्पितः ॥

शृङ्गारेषु जनाहर्षा दृश्यते गीयते बुधैः ।
आलापो जीवितं प्रोक्तं शरीरं तस्य जन्मभूः ॥

उभयोस्सङ्गमो यत्र तदेवोत्तमगायनम् ।
[1]अलघुस्वरसंयुक्तं सुकण्ठध्वनिमिश्रितम् ॥

[1]असमाप्ते समालापे पदमुद्ग्राहयन्ति ये ।
[1]अवोधाद्यर्णभिन्ना [न्नं तद् आलापं] राजानं मध्यमं स्मृतम् ॥

क्षालस्वरं व[च]क्रमुखं निरोष्ठं सानुनासिकम् ।
अप्रबन्धं वितालश्च कनिष्ठं गायनं स्मृतम् ॥

[2]शुद्धसालङ्कसंपूर्णं भेदैर्गीतं त्रिधामतम् ।
निबध्य मणिबन्धं तं द्वितन्तुर्द्विविधंस्मृतम् ॥

आलाप्तिरनिबद्धास्यान्निबद्धं तालसंयुतम् ।
आलापा द्विविधाः प्रोक्ताः साक्षराश्च निरक्षराः ॥

स्फुरितः कम्पितो लीनो स त्रिपादोलितौ यथा ।
आहतश्चित्रभिन्नश्च सप्तै ते गमकास्स्मृताः ॥

---

1. सङ्केतानि श्लोकानि ।

2. सङ्केतस्थाने दृश्यते D. 10811 मातृकायाम् ।

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

गौडी च मधुरा शुद्धाऽशुद्धा साधारणी तथा ।
आलाप्तिः पञ्चधा ज्ञेया गीतरागाश्च सूचकाः ॥

रसिको भावकश्चैव अनुकारोऽथ रञ्जकः ।
चत्वारः कथिताह्येते शिष्याकारास्तु पञ्चमः ॥

यथा पुरुषनारीणां लक्षणं भरणं च यत् ।
तथा गीतं मुनिश्रेष्ठा ज्ञातव्यं सुप्रयत्नतः ॥

उद्ग्राहे नगराश्चैव अन्तरे शिथिलास्तथा ।
अभङ्गे हटकश्चैव नववर्णान् विवर्जयेत् ॥

नकारे नष्टसर्वस्वो घकारे घात एव च ।
हकारे हरतेलक्ष्मीः त्रयो गीतस्य वैरिणः ॥

धातुमातुस्वरास्ताल गणवर्णाः षडुच्यते ।
एतान्यङ्गानिषट्चैव ज्ञातव्यानि मनीषिभिः ॥

स्वरसारस्मृतिः कर्णो द्विविधालप्तिलोचने ।
रागक्रियाङ्ग भाषाङ्ग शरीरं प्रोच्यते बुधैः ॥

पदे पदस्तु विज्ञेयो हस्तारोहावरोहणे ।
निबद्धो अनिबद्धत्वं घ्राणं च वदनं स्मृतम् ॥

स्थानावयववर्णानां त्रिस्थानं त्रिगुणोच्यते ।
यो जानाति पुमान् श्लोको ज्ञायते गीतकोविदैः ॥

नादध्वनिश्च माधुर्यभावभेदरसास्मृतम् ।
सजीवो जीवनं ज्ञेयं गायकाः कवयस्तुधीः ॥

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

धातुहीनं पादभङ्गं कुशब्दं गुणनिर्वृतम् ।
द्विकर्णं मिश्ररागं च अप्रवृद्धं च मातृभिः ॥

कुवितालं स्थूलबाधा आयुर्धामं पुनर्गताम् ।
चिरं संविकलंभिन्नं गीतदोषाश्चतुर्दश ॥

अधमो धातुकारश्च मातुकारश्च मध्यमः ।
धातुमातुसमायुक्ताः उत्तमाः परिकीर्तिताः ॥

मगणो यगणश्चैव रगणस्सगणस्तथा ।
तगणो जगणश्चैव भगणो सगणोऽष्टमः ॥

सविसर्गः सव्यञ्जनो दीर्घयुक्तः परोगुरुः ।
एतस्य वैपरीत्येन लघुर्ज्ञेयो विचक्षणैः ॥

सानुस्वारो विसर्गान्तो दीर्घो युक्तपदश्च यः ।
वायत्सोयत्सोतद्वक्त्रो ज्ञेयोऽन्यो मातृजो लजः ॥

यो भूमिस्त्रिगुरुश्रियंदिशति यो वृद्धिं जलं चादियो-
रोग्निर्मध्यलघुर्विनाशमनिलो देशाटनं स्येन्तगः ।
तो व्योमान्त लघुनापहरणं जो केरिजं मध्यगो-
भश्चन्द्रो यशोज्वलं मखगुरुर्नशम्भुस्सयुस्त्रिलः ॥

सोमो भौमो बुधो जीवः शुक्रः शौरी रविस्तथा ।
क्रमात् कचटतानां पयशानां ग्रहाः स्मृताः ॥

अपसना गौरवर्णाः कृष्णाः कचटगा स्मृताः ।
मिश्रिताः श्यामवर्णाश्च रक्ताः सानुस्वरास्तथा ॥

॥ इति रागरत्नाकरो गन्धर्वराजविरचिते अष्टवर्गगीतलक्षणम् ॥

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

गायकमहिमा

गणपं चरणाम्बुजां वर-
नरजाड्यावरगेहकं स्मर ।
शारदां भजपादनिरञ्जन-
मिदमानस मानसे स्मर ॥

तच्छब्दे कथितं विश्वं ब्रह्म तत्र भवेत्तथा ।
तस्मात्तं नाभिशब्दोऽयं कथ्यते गीतकोविदैः ॥

अकारो वासुदेवस्य तस्मादादौ विचिन्तयेत् ।
एकारः शक्तिरेवस्याद्गायनादौ प्रकीर्तिता ॥

रागे घनचरा प्रोक्ता तस्मिन् ज्ञाने शुभंभवेत् ।
ईकारः सर्ववर्णानां माता लक्ष्मीः प्रकीर्तिता ॥

इति स्मृत्वा स्मरे नूगान् शुभं भवति नान्यथा ।
इति वै मातृका सेयं अनुलोमविलोमतः ॥

ईशवाक्यं प्रयत्नेन यो जानाति स गायकः ।
रागरत्नाकरंज्ञानं न जानति स मूढधीः ॥

तस्मात्सर्वप्रयत्नेन रागज्ञानं समाचरेत् ।
एकान्ते विजने देशे नद्योघे गर्जिते सति ॥

तत्र स्थाने सुशिक्षेत रागमार्गे विचक्षणः ।
ह्रदे वा देवखाते वा गुरुदर्शितमार्गतः ॥

CC-0TSarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

कण्ठप्रमाण उदके स्थित्वा रागमवाप्नुयात् ।
ब्राह्मी मुण्डी वचा शुण्ठी पिप्पली मधुसंयुता ॥
सप्तरात्रप्रयोगेण किन्नरैस्सह गीयते ॥

अद्रिक भद्रकपितस्सं-वच-
बावच मुण्डिसमुद्यरसं-नरः ।
वाञ्छ्मि कोकिलनाद रसं-वरं
कृष्णचतुर्दशिमाद्यदिनं-पिब ॥

शिवाम्बु त्रिफलायुक्तं पिबेन्मण्डलसप्तकम् ।
दिव्यदेहो भवेन्मर्त्यो दिव्यस्वरमवाप्नुयात् ॥

इत्येवं रागसंयुतं शिवेन परिकीर्तितम् ।
भक्ताय यक्षराजाय गन्धर्वाय च धीमते ॥

क्षीरोदमथनोद्भूतैरप्सरोगणकैस्तथा ।
अभ्यस्येदं प्रयत्नेन ततो भुवि समागतम् ॥

सुखिजनसुखकारी दुःखिनां(नां) दुःखहारी
श्रवणजनविनोदी कामिनीचित्तभेदी ।
रतिरभसि(स)विधाता मन्मथस्याग्रदूतो
जयति जयति नादः पञ्चमश्चोपदेशः ॥

न कैलासे न वैकुण्ठे वसतश्शिवमाधवौ ।
यत्र गायन्ति ये भक्ताः तिष्ठतस्तत्र सन्निधौ ॥

रागज्ञानं हरेर्भक्तिः सुपुण्येन च लभ्यते ।
गुरोः कृपापयः पीत्वा सर्वसिद्धिमवाप्नुयात् ॥

॥ इति गन्धर्वराजविरचितः श्रीरागरत्नाकरः सम्पूर्णः ॥

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

தமிழாக்கம்

ராகமாலிகைகளின் பெயர்கள்

ஸ்ரீராகம், வஸந்தம். பஞ்சமம், பைரவம், மேக ராகம், நடநாராயணம் என ஆறு வகைப்படும். இவை முக்கியமான ராகங்கள்.

ஸ்ரீராக த்யானம்

சந்திரனின் ஒளியைப் போன்ற உடலும், காதுகளில் தாமரைமலரைத் தரித்துக்கொண்டும், தாமரை போன்று சிவந்த மென்மையான கைகள், அதில் கரும்பைப் பிடித்துக் கொண்டும் காட்சி தருபவர் ஸ்ரீராகத்தின் ராகதேவதை.

ஸ்ரீராகதேவனின் துணைவிகள்

1. கௌடீ 2. கொல்ஹாலினீ, 3. ஆந்தாளீ, 4. த்ராவிடீ, 5. மாலிகௌசிகா. 6. தேவகாந்தாரீ ஆகியோர்.

கௌடீ ராக த்யானம்:

ஸ்தன பாரத்தால் சற்று வளைந்த மேனியும், காதணி அணிந்த நீண்ட காதுகளும், சுடர்விடும் ரத்னமாலைகளை அணிந்துகொண்டும், தலையில் முத்துமாலை சுடர்விட, கைகளில் தாமரை மலரும். விளையாட்டான புன்னகை தவழ்கின்ற முகமும், வெண்மையும் மென்மையுடைய ஆடையைத் தரித்துக்கொண்டும், "கௌடீ" என்னும் ராகதேவதை விளங்குகின்றாள்.

கொல்ஹாலினீராக த்யானம் :

ஒளிபொருந்திய சஞ்சல மேனியும், வெண்மையான உடலும், அழகிய சஞ்சலமான விழிகளும், பருத்த ஸ்தனங்

CC-0TSarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

களும், தாம்பூலச் சுருளை (பீடா) கையில் தரித்துக் கொண்டும், நீல வண்ண ஆடையை தரித்துக்கொண்டும் விளங்குபவள் கொல்ஹாலினி என்னும் ராக தேவதை.

ஆந்த்ராளிகாராக த்யானம் :

இளமை ததும்பும் உடலும், அழகிய கண்களும், சுவைக்கத் தக்க அழகு வாய்ந்த உருவமும், உயர்ந்த கொங்கைகளும், குங்குமம் போன்ற சிவந்த மேனியும், குருக்கத்திமலரை (மாதவி புஷ்பத்தை) கைகளில் ஏந்திக் கொண்டும், நலம் பயக்கும் அங்கங்களுடன் திகழ்கிறாள் ஆந்த்ராளிகா என்னும் ராக தேவதை.

த்ராவிடராக த்யானம் :

காதணிகளுடன் கூடிய நீண்ட காதுகளும், அழகும் இனிமையும் கலந்த பேச்சுடையவளும், பொன்மயமான கனத்த ஸ்தனங்களுடனும், ஆடையற்ற நிதம்பங்களுடன் விளங்குகின்றவள் 'த்ராவிட' என்னும் ராக தேவதை.

மாலகௌசிகா ராக த்யானம் :

சிரிக்கும் முகமும், மஞ்சள் வண்ணமும், கனத்தும், பருத்துமிருக்கும் உறுதி வாய்ந்த கொங்கைகளும், தாமரை மலர் தரித்த கைகளுடனும் விளங்குபவள் மாலகௌசிகா என்னும் ராக தேவதை.

தேவகாந்தாரி ராக த்யானம் :

மூன்று மடிப்புகளுடன் கூடிய ஆழ்ந்த நாபியும், கருத்த மேனியும், மனதைக் கவரும் அழகிய தோற்றமும், வட்டமான பருத்த கொங்கையும், தாமரை மலரைக் கையில் ஏந்திக்கொண்டும், தாமரைமலரில் வீற்றிருந்து புகழுடனும் விளங்குகின்றவள் தேவகாந்தாரி என்னும் ராக தேவதை.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

வஸந்த ராகமும் அவரது பத்னிகளும்

வஸந்தராக (த்யானம்):

கருத்த மேனியர், மலரின் மணமும், பலாச புஷ்பத்தை அணிந்தவரும், மகிழ்ச்சி பொங்கும் உடல் வாகும், அழகிய கோலத்துடன் வில்லையும் அம்பையும் தரித்தவரும், யானையை வாஹனமாகக் கொண்டவருமாக விளங்குபவர் வஸந்தராகதேவன்.

வஸந்த ராகதேவனின் மனைவியர்:

1. தாநாஸ்ரீ, 2. வராடீ, 3. ராமக்ரியா, 4. படமஞ்ஜரீ, 5. கோண்டாக்ரீ, 6. தேசாங்கா ஆகியோர்.

தாநாஸ்ரீ ராக த்யானம்:

மஞ்சள் வண்ணத் திருமேனியும், மஞ்சளாடைத் தரித்துக்கொண்டும், மருண்ட (சஞ்சலமான) பார்வையும், அழகிய உடலும், இரு கைகளிலும் தாமரை மலரைத் தரித்துக்கொண்டும், மாலதீ புஷ்பத்தை (குருக்கத்திமலர்) தலையில் சூடிக்கொண்டும், பருத்த நகில்களும், அனைத்து அணிகளையும் அணிந்துகொண்டும், நவமணிகளால் அமைந்த சிலம்புகளைக் கால்களில் அணிந்துகொண்டும், இசை வாணர்களின் இசைக்கு மனம் மகிழ்ந்து அவர்களுக்கு அனைத்துச் சுகங்களையும் அளிப்பவளாகத் திகழ்கின்றவள் 'தாநாஸ்ரீ' என்னும் ராக தேவதை.

வராடீ ராக த்யானம்:

குயில் போன்ற குரலும், கவர்ச்சி மிகுந்த அணிகளை அணிந்துகொண்டும், மெல்லிய உடலும், சிறிய கொங்கையும், குள்ளமான உருவமும், நாவல் பழத்தைக் கைகளில் ஏந்திக்கொண்டும் அருள் பாலிக்கிறாள் வராடீ என்னும் ராக தேவதை.

CC-0.TSarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

ராமக்ரீ ராக தியானம் :

பருத்த காட்டு மரத்தினடியில் நிற்பவளும், பருத்த உடலும், அம்புகளைக் கையில் தரித்துக்கொண்டும் ரமிக்கச்செய்யும் விளையாட்டுள்ளவளும், காட்டு மலர்களை மாலையாகச் சூடியவளும், தாழம்பூவின் வண்ணத்தினளும், அமுதக் குடத்தைக் கையில் ஏந்திக் கொண்டும், ராமக்ரீ என்னும் ராக தேவதை உங்களைக் காக்கட்டும்.

படமஞ்ஜரீ ராக த்யானம் :

வெண்ணிறமான உடல் வண்ணமும், வெண்மையான மலர்களைத் தரித்துக்கொண்டும், தயிர் சாதத்தைக் கையில் ஏந்திக்கொண்டும், அமைதியான குணமுள்ளவளுமாக இருக்கும் 'படமஞ்ஜரீ'' என்னும் ராகதேவதை நம்மைக் காக்கட்டும்

கொண்டக்ரீ ராக த்யானம் :

மலர்க் கொத்துக்களை மாலையாக அணிந்து கொண்டும், மருண்ட பார்வையும், அம்பைத் தனது கையில் ஏந்திக்கொண்டும், அன்னப் பறவையின்மீது ஆரோகணித்தும், வெளியில் தெரியும்படியான கொங்களுடனும், இலைகளால் அமைந்த (ஓலை) காதணிகளுடனும், மயிலின் குரலொலி போன்ற குரலொலியுடையவளும், சிவந்த உதடுகளும், சங்கு போன்ற கழுத்தும், யௌவனம் ததும்பும் அங்கங்களுடனும் விளங்கும் "கொண்டாக்ரீ" என்னும் ராகதேவதையை வணங்குகின்றேன்.

தேசாங்கா ராக த்யானம் :

யௌவனப் பருவமுடையவளும், கருமை நிறமும், குருக்கத்தி மலரில் (மாலதீ புஷ்பத்தில்) மிகுந்த விருப்பம் உடையவளும், அழகிய ஸ்தனங்களும், சிறுத்த இடையும், குங்குமப்பூச்சாந்தை அங்கங்களில் பூசிக்கொண்டும் திகழும் "தேசாங்கா" ராகதேவதையை வணங்குகிறேன்.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

பஞ்சம ராகமும் அவரது பத்னிகளும்

பஞ்சம ராக த்யானம் :

வெண்மை நிறமும், அழகிய கண்களும், வில் - அம்பு களை கையில் தரித்துக் கொண்டு குதிரையில் சவாரி செய்பவரும், சிவந்த ஆடையும், காட்டில் வசிப்பவரும், நன்னெறியும் நன்னோக்கமுடையவருமாக பஞ்சம ராக தேவன் விளங்குகின்றார்.

இவரது மனைவிகள் :

1. கம்பாவதீ 2. த்ரிவளீ 3. ஆஹிரீ 4. ககுபா 5. வல்லகீ 6. ஸாவேரி ஆகிய அறுவர்.

கம்பாவதி ராக த்யானம் :

அரச வம்சத்தை சேர்ந்தவள் போல அழகு பொருந்தியவளும், வியப்பைக் கொடுக்கும் ஆடையாபர ணங்களை அணிந்து கொண்டும், பாம்பைக் கைகளில் பிடித்துக்கொண்டும், பஞ்சம ராகத்தின் மனைவி கம்பாவதீ ராக தேவதை விளங்குகிறாள்.

த்ரிவளீ ராக த்யானம் :

அழகியும், எளிமையானவளும், கருமை நிறமும், சற்றே வளைந்த நாபியும், வயிறும், உடலும் கொண்டவளும், உடலின் மூன்று இடங்களில் அழகான வளைவுகளுடனும், கம்பீரமான பார்வையும், கிளியைக் கையில் தரித்துக் கொண்டும், த்ரிவளீ என்னும் ராக தேவதை விளங்கு கிறாள்.

ஆஹிரீ ராக த்யானம் :

நாக கன்னிகையாகவும், பாலைப் பருகியதால் சந்தோஷமடைந்தவளாகவும், அழகிய குண்டலங்களை

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

காதுகளில் அணிந்துகொண்டும், பாம்பை மாலையாக அணிந்துகொண்டும். கடினமான கொங்கைகளுடனும் ஆஹிரீ ராக தேவதை விளங்குகிறாள்.

ககுபா ராக த்யானம் :

சிவந்த கண்களும், வெண்மையான உருவமும், பருத்த நகிலும், தாம்பூலத்தை மென்மையான கரத்தில் ஏந்திக் கொண்டும், சிவந்த பற்களும் கொண்டு ககுபா ராக தேவதை விளங்குகின்றாள்.

வல்லகீ ராக த்யானம் :

நான்கு கைகள், நீலநிற மேனி, தாமரை மலர் போன்ற மென்மையான கைகளில் ஆம்பல் மலரைத் தாங்கி, மயில் வாஹனத்தில், மூன்று கண்களுடன், பருத்த கொங்கைகளுடனும் வல்லகீ என்னும் ராக தேவதை விளங்குகின்றாள்.

ஸாவேரீ ராக த்யானம் :

நீண்ட கருங்கூந்தலும், பருவம் கொண்ட சமய வயதினளும், சற்றே பருத்த நகிலும், பயந்த தோற்றமும், தனது விளையாடல்களின் மூலம் காண்பவரது மனத்தைக் கவருகின்றவளும், கண்ணாடியில் தனது முகத்தை (அடிக்கடி) கண்டு ரசிப்பவளுமாக விளங்குகின்றவள் ஸாவேரீ என்னும் ராக தேவதை.

பைரவ ராகமும் அவரது பத்னிகளும்

பைரவ ராக த்யானம் :

அழகிய மேனியும், விபூதியை மேனி முழுதும் பூசிக் கொண்டும், தலையில் சந்திரப் பிறையைச் சூட்டிச்

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

கொண்டும், கையில் த்ரிசூலம் ஏந்தி, ரிஷபத்தை வாஹனமாகக் கொண்டும், காக்ஷி தருபவர் பைரவ ராக தேவதை என்று முனிவர்கள் கூறுவர்.

இவரது மனைவிகளான பெண் ராகங்கள் :

1. பைரவி. 2. கூர்ஜரீ. 3. லலிதா. 4. வேளாவுலீ. 5. கர்நாடீ. 6. ரக்தஹஸ்தா ஆகியவை. இவற்றின் உருவ தியானம்:

பைரவீ ராக த்யானம் :

இடக்கையில் மணி, திரிசிரசின் தலை, ஆகியவற்றை ஏந்திக் கொண்டும், சர்வாபரணங்களையும் அணிந்து கொண்டும், முக்கண்களுடனும், சந்திரனைத் தலையில் சூட்டிக்கொண்டும், சந்திர ஒளிபோன்ற குளுமை பொருந்திய ஒளியுடனும், ரிஷப தேவர் மீது ஆரோகணித்துக்கொண்டும், ஸாமஸ்வரமாக ஸாமகானம் செய்து கொண்டும், விபூதியை உடல் முழுதும் பூசிக்கொண்டும், உயர்ந்தெழும் ஸ்தன்யங்களுடன் விளங்குகின்றவளும், வேண்டிய வரங்களை நல்குகின்றவளுமான பைரவீ ராக தேவதையை வணங்குகின்றேன்.

குர்ஜரீ ராக த்யானம் :

சிவந்த முகம், சிவந்த கைகள், சிவந்த நகங்கள், சிவந்த ஆடை, எட்டு கால்கள், இரண்டு கைகள், மானிடத்து அன்பு, ஆகியவற்றுடன் கூடிய குர்ஜரீ ராக தேவதை அனைத்து ஸுபங்களையும் நல்கட்டும்.

லலிதா ராக த்யானம் :

தங்கம் போன்று ஜொலிப்பவளும், முக்தைப் (இளமையின் தொடக்கம்) பருவமுடையவளும், தாமரை போன்று சிவந்துள்ள கைகளில் வீணையைத் தரித்துக் கொண்டும்,

CC-0TSarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

குயில் போன்ற குரலும், விரும்பியதை நல்கும் கல்பக விருக்ஷம் போன்றவளுமான லலிதா என்னும் ராக தேவதை நமது விருப்பங்களை அருளட்டும்.

வேளாவுலீ ராக த்யானம் :

இரத்தம் போன்ற சிவந்த மேனியும், அழகிய சிற்றிடையும், சிவந்த ஆடையும், சிவந்த அணிகளை அணிந்து கொண்டும், செந்தாமரை மலரை இரண்டு கைகளில் தரித்துக்கொண்டும், உயர்ந்த தனங்களுடன் பைரவ ராக தேவனின் மனைவியான வேளவுலீ காட்சி நல்குகிறாள்.

கர்நாடிகா ராக த்யானம் :

போகத்தை விரும்புகின்றவளும், பட்டாடை (வெண்ணிறம்) அணிந்து கொண்டும், அழகிய நாபியையுடையவளும், வட்டமான ஸ்தனங்களும், உடல் முழுதும் ஆபரணங்களை அணிந்துகொண்டும், சுரப் புன்னை மலர் மாலையை அணிந்துகொண்டும் காட்சி நல்குபவள் கர்நாடிகாராக தேவதை.

ரக்தஹஸ்தா ராக த்யானம் :

சிவந்த கைகள், சிவந்த பாதங்கள், சிவந்த மலர், சிவந்த தண்டாயுதம், சுடர் போல் பிரகாசிக்கும் பொன்மயமான அணிகள், ஆகியவற்றுடன் விளங்குகின்றவள் 'ரக்தஹஸ்தா' என்னும் ராக தேவதை.

மேக ராகமும் அவரது பத்னிகளும்

மேக ராக த்யானம் :

கதம்ப மரத்தடியில் நின்று கொண்டிருப்பவரும், மயில் வாஹனத்துடனும், அலரி (கரவீர) மரத்தால்

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

அமைந்த பாத்திரத்தைக் கையில் ஏந்திக்கொண்டும், மஞ்சள் நிற ஆடையை அணிந்துகொண்டும், கருத்த நீல மேனியும், கொண்டு விளங்குபவர் 'மேகராகம்' எனப்படும் ராகதேவதை

*இவரது மனைவியர் :

1. த்ரோடகீ. 2. மோடகீ 3. அஹன்னடா. 4. அபரா. 5. ப்ருஹன்நடா. 6. மல்லரீ ஆகியவர்கள்.

த்ரோடகீ ராக த்யானம் :

பல வண்ணங்கள் அமைந்த மேலாடையுடன் அழகிய ரவிக்கை அணிந்துகொண்டும், அழகிய கங்கணம் கைகளில் திகழ, இடையில் ஒட்டியாணம் அலங்கரிக்க, அழகிய கொங்கைகளுடன் கைகளில் வீணை ஏந்திக்கொண்டும், இசையில் விருப்பங்கொண்டும், மேகராகத்தின் முதல் மனைவியான த்ரோடகீ என்னும் ராகதேவதை விளங்குகிறாள்.

மோடகீ ராக த்யானம் :

இடுப்பில் குடம் ஏந்தியும், சந்திரனை நிகர்த்த முகத்துடனும், அமைதியின் இருப்பிடமாகவும், அழகிய ஆடையணிந்து கொண்டும், இரண்டு கைகளுடனும், உயர்ந்த கொங்கைகளுடனும் காட்சி தருபவள் மோடகீ என்னும் ராகதேவதை.

அஹந்நடா ராக த்யானம் :

நாட்டிய நங்கை போல் காட்சியளிப்பவளும், கச்சுமூடிய கொங்கைகளுடனும், நாட்டியம் மற்றும் இசையில்

* 1. மல்லாரீ. 2. தேசகாரீ 3. பூபாலீ. 4. குர்ஜரீ. 5. டங்க 6. பஞ்சமீ என்ற ஆறு ராகங்கள் மேக ராகத்தின் துணைவிகளாக வேறு சுவடிகளில் காணப்படுகிறது.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

நல்ல புலமையும், பெண் குயில் போல் இனிய குரல் கொண்டு பாடுகின்றவளாக விளங்குபவள் 'அஹந்நடா' என்னும் ராக தேவதை.

அபரா (கௌரீ) ராக த்யானம் :

அபரா என்னும் ராக தேவதை வெண்மை நிறமும், சங்கீத சாஸ்திரத்தில் நல்ல புலமையும். நான்கு கைகளும், அழகிய உடலும், திவ்யமான ஆடையால் மூடப்பட்டுள்ள கொங்கைகளுடனும் விளங்குகின்றாள்.

ப்ருஹன்நடா ராக த்யானம் :

நடிக்கும் திறமை முற்றும் கொண்டவளும், அன்னப் பறவையை ஆஸனமாகக் கொண்டவளும். புத்தகத்தைக் கையில் தரித்துக்கொண்டும், வெண்மையான மலர்களை அணிந்து கொண்டும், பருத்த கொங்கைகளும், பால் சாதம் புசிப்பவளாகவும், அழகிய இடையுடன் காட்சி நல்குகிறாள் 'ப்ருஹன்னடா' என்னும் ராக தேவதை.

மல்லரீ ராக த்யானம் :

கின்னரீ என்னும் வாத்யத்தைக் கையில் ஏந்திக் கொண்டும். கிளி மற்றும் ஸாரஸ பக்ஷி (வண்டாமூவான் குருவி) யுடனிருப்பவளும், அனைத்து அங்கங்களிலும், ஆபரணம் அணிந்து கொண்டும், மேக ராகத்தின் துணைவி யான மல்லரீ ராக தேவதை விளங்குகின்றாள்.

நட நாராயண ராகம்

நடநாராயண த்யானம் :

நான்கு கைகளும், மஞ்சளாடையை அணிந்து கொண்டும், நீண்ட மாலையைக் கழுத்தில் அணிந்து

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

கொண்டும், சியாமள வர்ணத்தில் உடல் நிறம் கொண்ட வரும், அழகிய குதிரையை வாகனமாகக் கொண்டவரும், மகிழ்வான தோற்றத்துடனும், நட நாராயண ராகதேவதை விளங்குகிறார்.

இவரது மனைவிகளான பெண் ராகங்கள் :

1. வங்காலி. 2. சுத்தசாலங்கா. 3. காம்போஜா. 4. மது மாதவீ. தேவக்ரீ. 6 தேஹலீ ஆகியோர். இவர்களுடைய உருவ வர்ணனை பின்வருமாறு.

வங்காலீ ராக த்யானம் :

கருமையான நிறமுள்ளவளும், கருத்த ஆடையை அணிந்தவளும், கணவனிடம் ரதிகேளியை விரும்புகின்ற வளும், எட்டுவித நாயகிகளில் ஒருவளான ப்ரகல்பாவின் தன்மையைக் கொண்டும், பருத்த நகிலுடனும், தந்தி வாத்யத்தை (தம்புரா) கையில் கொண்டவளும், ஆம்பல் மலரை விரும்புகின்றவளுமாக வங்காலீ ராக தேவதை விளங்குகின்றாள்.

சுத்த சாலங்க த்யானம் :

தூய்மையான வெள்ளை நிற ஆடையைத் தரித்துக் கொண்டும், வெண்மையான உடல் நிறமும், அழகாகக் காட்சியளிப்பவளும், அழகிய நீண்ட கூந்தலும், நொங்கு போன்ற தனத்துடனும், ரதி போன்றவளும், நான்கு கரத் துடனும், உடலில் சந்தனத்தைப் பூசிக் கொண்டிருப்பவளு மாக விளங்கும் சுத்த ஸாலங்கராக தேவதை அருள் புரியட்டும்.

காம்போஜா த்யானம் :

சந்திரனைப் போன்ற முகமும், நீலோத்பல மலரை அணிந்துகொண்டிருப்பவளும், தாமரை மொட்டுப்போன்ற

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

அழகிய தனங்களை உடையவளும், கருங்குறிஞ்சிப்பூ (பாணபுஷ்பம்) போன்ற, தன்மையுடனும் காம்போஜாராக தேவதை விளங்குகிறாள்.

மதுமாதவீ த்யானம் :

வஸந்த வனத்தின் (மலர்க்காட்டின்) மத்தியில் இருப்பவளும், மாதவீ மலரில் விருப்பம் நிறைந்தவளும், அழகியவளாகவும், பருத்த கொங்கையுடனும் காட்சி நல்குகின்றவள் மதுமாதவீ என்னும் ராக தேவதை.

தேவக்ரீ த்யானம் :

இரண்டு கைகளாலும் தயிர் பாத்திரத்தை ஏந்திக்கொண்டும், பிரகாசிக்கின்ற ஆபரணங்களை கழுத்தில் அணிந்துகொண்டும், அழகிய கொங்கைகளுடனும், குசும்ப மலர் போன்ற வண்ணமுடைய ஆடையை அணிந்துகொண்டும், சந்திரனைப் போல் ஒளிபொருந்திய முகத்துடனும், சந்தனத்தை உடலில் தரித்துக்கொண்டும், குங்குமப் பூப்போன்ற சரீரத்துடனும், அழகிய விழிகளும் கொவ்வை இதழ்களுடனும் தேவக்ரீ என்னும் ராக தேவதை விளங்குகின்றாள்.

தேஹலீ த்யானம் :

பொன்மயமான அழகிய தோற்றமுடையவளும், கழுத்தில் ரத்னமயமான மாலைகளைத் தாங்கும் கொங்கைகளையும், மலரின் மொட்டுப்போன்ற உதடுகளயும் தாமரைப் போன்ற கைகளில் 'வல்லகீ' என்னும் வீணையை ஏந்திக்கொண்டும், சுபங்களைத் தருபவளும், அனைவரையும் மோகிக்குமாறு செய்பவளுமான தேஹலீ ராக தேவதை விளங்குகிறாள்.

நடநாராயண ராகத்தின் (மனைவி) பெண் ராகங்கள் முற்றும்.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

மேலே கூறப்பட்டுள்ள ஆறு ராகங்களுக்கும், ஒவ்வொரு ராகத்திற்கும் ஆறு மனைவியர் வீதம் 36 ராகங்கள் கூறப்பட்டன. இவைகள் 36 ஆறுக்கும் ஒவ்வொரு (புருஷ ராகங்கள்) பிள்ளைகள் வீதம் 36 ராகங்கள் தோன்றின. அவற்றின் பெயர்களும், உருவ அமைப்புக்களும் வருமாறு:-

பெயர்கள் :

ஜனகராகம்		ஜன்யராகம்
ஸ்ரீராகம் x கௌட	---	ஶுத்த கௌட ராகம்
ஸ்ரீராகம் x கொல்ஹாலினி	---	கர்நாட ராகம்
ஸ்ரீராகம் x ஆந்த்ராலிகா	---	மாளவராகம்
ஸ்ரீராகம் x த்ராவிட	---	பூர்விக ராகம்
ஸ்ரீராகம் x மாலகௌசிக	---	கேதாரராகம்
ஸ்ரீராகம் x தேவகாந்தாரி	---	ஸாலங்கராகம்

உருவ அமைப்பு (த்யானம்)

ஶுத்தகௌட ராகம்

வெண்மையான வுருவமும், வெள்ளையாடை உடுத்திக் கொண்டும், சர்வ ஆபரணங்களுடனும், சர்பத்தை (பாம்பை) வாகனமாகவும், சங்கை கைகளில் தரித்துக் கொண்டும், அன்பாகவும் விளங்குகின்றவர் ஶுத்தகௌட என்னும் ராக தேவதை.

கர்நாடக் த்யானம் :

குங்குமப் பூப்போன்ற் ஆடையைத் தரித்தவரும், வெண்மை நிறமுடைய எருமையை வாஹனமாக உடைய வரும், தேங்காயை மிகவும் விரும்பி யுண்பவருமான கர்நாடக ராகதேவதையை நினைந்து வணங்குகின்றேன்.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

மாலவ கௌட த்யானம் :

பருத்த உடலும், சிவந்த கண்களும், வில்லும், அம்பும் கையில் தரித்துக் கொண்டும், சியாமள வர்ணத்துட னுள்ள திருமேனியையும், அழகிய வண்ணமுடைய ஆடையை அணிந்துகொண்டும், மாலவ கௌட என்னும் ராக தேவதை விளங்குகிறார்.

பூர்விக த்யானம் :

வெண்மையான ஆடையும், யானை மேல் வீற்றிருப்ப வரும், வில் வித்யையில் கரை கடந்த புலமையும், வலிமை யுடைய உடலுடனும், பல்வேறு வண்ணமுடைய உடலமைப் பைக் கொண்டவருமான பூர்விகராக தேவதை விளங்கு கின்றார்.

கேதாரகௌட த்யானம் :

கற்பூரம் போன்ற வெண்மையுடையவரும், மானை வாஹனமாகக் கொண்டவரும், வில்–அம்புகளைத் தமது தாமரை போன்ற மென்மையுடைய கைகளில் ஏந்திக் கொண்டும் காண்பவர் மகிழும் உடலழகைக் கொண்ட வரும், சிவபெருமானது சந்நிதியில் வீற்றிருப்பவருமாக கேதார கௌட ராக தேவதையின் உருவ அமைப்பு கூறப் படுகிறது.

ஸாலங்ககௌட த்யானம் :

பருத்த உடலும், சியாமள மேனியும், மஞ்சள் வண்ண ஆடை உடுத்திக்கொண்டும், மகிழ்ச்சி ததும்பும் முக மண்ட லமும், ஆட்டை வாஹனமாக உடையவரும், கத்தியை கையில் தரித்துக்கொண்டும் ஸாலங்ககௌட ராக தேவதை விளங்குகின்றார்.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

வஸந்த ராகத்தின் பிள்ளைகள்

ஜனக ராகம்		ஜன்ய ராகம்
வஸந்த x தானாஸ்ரீ	—	ஜேஜாவதீ ராகம்
வஸந்த x வராடீ	—	ஹர்ஷ ராகம்
வஸந்த x ராமக்ரியா	—	மல்ஹார் ராகம்
வஸந்த x படமஞ்ஜரீ	—	ரவிகுப்தி ராகம்
வஸந்த x கொண்டாக்ரீ	—	ஸிந்தூர ராகம்
வஸந்த x தேசாங்கா	—	டங்க ராகம் (டக்க ராகம்)

உருவ அமைப்பு (த்யானம்)

ஜேஜாவதீ த்யானம் :

காண்பவருக்கு ஆனந்தமளிக்கும் உடல், நீலவர்ணம், மங்கலங்களை நல்கும் ஆபரணங்கள், மஞ்சளாடை, யானை வாஹனம் ஆகியவற்றுடன் விளங்குகின்றவர் 'ஜேஜாவதீ ராகதேவதை',

ஹர்ஷ த்யானம் :

மிகப் பருத்த உடலும், மென்மையான கைகளும், மென்மையான திருவடிகளுமுடையவராகவும், பருத்த வயிறும், வெண்மையான உடலும், அழகிய கண்களும், கைகளில் ஜபமாலையும் கொண்டு விளங்குபவர் ஹர்ஷ ராக தேவதை என்று முனிவர்கள் கூறுவார்கள்.

மல்ஹாரீ த்யானம் :

மலமற்றவராயும், சாத்விகம் நிறைந்தவரும்; இறைவனை வழிபடுகின்றவராயும், பாதுகைகளை அணிந்து கொண்டும், கையில் தண்டம் ஏந்தியவராயும், குடுமியையும், யக்ஞோபவீதமணிந்தவராயும் விளங்குபவர் 'மல்ஹாரீ' என்னும் ராக தேவதை.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

ரவிகுப்தக த்யானம் :

வெண்மை கலந்த சியாமள வர்ணமுடையவரும் (Gray) ஒளிபொருந்தியவரும், மஞ்சள் வர்ண ஆடை அணிந்தவரும், மிகுந்த அழகுடையவரும். குதிரையை வாஹனமாகக் கொண்டவரும் கையில் தாமரை மலரைக் கொண்டிருப்பவருமாக விளங்குபவர் 'ரவிகுப்தக ராகத்தின்' தேவதை.

ஸிந்தூர த்யானம் :

யானையின் முகத்தையுடையவரும், அங்குசத்தைக் கையில் ஏந்திக்கொண்டும், சிவந்த திருமேனியும், சிவந்த ரத்னாபரணங்களை அணிந்தவரும், உடலில் ஸிந்தூரப் பொடியைப் பூசிக்கொண்டும், விளங்குகின்றவர் ஸிந்தூர ராக தேவதை.

டங்க (டக்க) த்யானம் :

வெண்மை கலந்த மஞ்சள் நிறத்தினரும், பருத்த உடலும், நல்ல அறிவாளியாகவும், பலம் மிக்கவராகவும், உளுந்து கலந்த கொழுக்கட்டையைக் கையில் தரித்தவராகவும் டங்கராக தேவதை விளங்குகின்றார்

பஞ்சம ராகத்தின் பிள்ளைகள்

ஜனக ராகம்		ஜன்ய ராகம்
பஞ்சமராகம் x கம்பாவதீ	—	ஹிந்தோள ராகம்
பஞ்சம ராகம் x த்ரிவலீ	—	படஹம்ஸ ராகம்
பஞ்சம ராகம் x ஆஹிரீ	—	காந்தார ராகம்
பஞ்சம ராகம் x ககுபா	—	பாவக ராகம்
பஞ்சம ராகம் x வல்லகீ	—	மனோஹர ராகம்
பஞ்சம ராகம் x ஸாவேரி	—	தீபக ராகம்

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

உருவ அமைப்பு (த்யானம்)

ஹிந்தோள ராக த்யானம் :

ஸ்யாமள வர்ணம் அமைந்த உடலும். குதிரையை வாஹனமாகக்கொண்டும், தாமரை மலரை விருப்பமாகக் கொண்டவரும். சிவந்த ஆடையை அணிந்துகொண்டவரும், பட்டாடையைக் கையில் ஏந்திக்கொண்டவராகவும் ஹிந்தோள ராக தேவதை விளங்குகிறார்.

படஹம்ஸ ராக த்யானம் :

குழந்தை விளையாட்டினரும், மகிழ்ச்சியை நல்கும் அழகின் கடல் போன்றவரும். புல்லாங்குழலைத் தன் கையில் ஏந்தியிருப்பவரும், கம்பீரம் பொருந்தியவரும், குழந்தைகள் பேசும் மழலைப் பேச்சுடையவராகவும் படஹம்ஸ ராக தேவதை விளங்குகிறார்.

காந்தார ராக த்யானம் :

எப்பொழுதும் பாடுகின்றவரும், நல்ல அறிவாளியும், ருத்ர வீணை வாசிப்பதில் வல்லவரும், அழகான திருமேனியுடையவரும். குள்ளமான உருவமும் கொண்டு விளங்குகின்றவர் 'காந்தார ராக தேவதை' என்று கூறப்படுகிறது.

பாவக ராக த்யானம் :

தீச்சுடர் போன்ற மேனி வண்ணமும், அதன் புகையைப் போன்ற கேசமும், ஜொலிக்கின்ற அழகு பொருந்திய தேஹ காந்தியும், 'சக்தி' என்னும் ஆயுதத்தைக் கையில் தாங்கியும், ஆட்டுக்கடாவை வாஹனமாகக் கொண்டும் விளங்குபவர் 'பாவராக தேவதை' என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

மனோஹர ராக த்யானம் :

மனத்தை வசீகரிக்கின்ற உடலழகும், பார்க்கத் தெவிட்டாத பேரழகும், மலர்களை அணிந்தவரும், தூய வெண்மை ஆடையைத் தரித்தவரும், காதுகளில் குண்டலங்களை அணிந்துகொண்டும். உக்கையை ஆயுதமாகக் கொண்டவரும், அனைவரிடமும் அன்பு கொண்டவராகவும் விளங்குகின்றவர் 'மனோஹர ராக தேவதை'.

தீபக ராக த்யானம் :

அழகான உடலமைப்புடன், வில்வ மரத்தினடியில் வசிப்பவரும், வில்லையும் அம்பையும் கையில் தரித்துக் கொண்டும், பொன் போன்ற கண்களும், வெண்மையான ஆடை உடுத்திக்கொண்டும் திகழ்பவர் 'தீபக ராக தேவதை'.

பைரவ ராகத்தின் பிள்ளைகள்

ஜனக ராகம்		ஜன்ய ராகம்
பைரவ x பைரவி	—	ஸ்ருங்கலாபரண ராகம்
பைரவ x கூர்ஜரி	—	லலித ராகம்
பைரவ x லலிதா	—	சந்த்ரசேகர ராகம்
பைரவ x வேளாவலீ	—	பஞ்சவக்த்ர ராகம்
பைரவ x கர்நாடீ	—	கல்ஹார ராகம்
பைரவ x ரக்தஹஸ்தா	—	காமந்த ராகம்

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

உருவ அமைப்பு (த்யானம்)

ஸ்ருங்கலாபரணம் (சங்கராபரணம்?)

திரிசூலம், தோமரம் ஆகியவற்றை கைகளில் அணிந்து கொண்டும், விருஷபத்தை வாஹனமாகக் கொண்டும், வெண்மையான உருவமுடன், பைரவரின் இதயத்திலிருந்து தோன்றியவர் 'ஸ்ருங்கலாபரணம்' என்னும் ராக தேவதை.

லலித ராக த்யானம் :

இளமை மிக்கவராயும், தூய வெண்மை நிறம் கொண்டவராயும், நறுமணம் கமழும் சந்தனம் தரித்தவ ராயும், மானைக் கையில் ஏந்தியும், சடையைத் தரித்துக் கொண்டும், யோகியாக விளங்குகின்றவர் லலிதராக தேவதை.

சந்த்ரசேகர ராக த்யானம் :

கர்ப்பூரம் போன்ற வெண்ணிறமும், பருத்த உடலும், பிறை சூடியும், ஆசையற்றவரும், மூன்று கண்களுடைய வரும், விபூதியைத் தரித்துக் கொண்டும் சந்த்ரசேகரர் என்னும் ராக தேவதை விளங்குகிறார்.

பஞ்சவக்த்ர ராக த்யானம் :

ஐந்து திருமுகமும், பத்து கைகளும், நெற்றியில் கண் ணுடனும், ரிஷபக் கொடியுடனும், மணி, சூலம் ஆகிய வற்றைக் கைகளில் ஏந்திக்கொண்டும், தீரன் போன்று விளங்குகின்றவர் 'பஞ்சவக்த்ர ராக தேவதை' என்று கூறப்படுகிறது.

கல்ஹார த்யானம் :

தாமரை மலரை ஆஸனமாகக் கொண்டும், முக்கண்க ளுடனும், புலித்தோலை ஆடையாகக் கொண்டும், அச்சத்

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

தைத் தருகின்றவரும், கட்வாங்கம் என்ற ஆயுதத்தைக் கையில் தரித்துக்கொண்டும், ரிஷபத்தை வாஹனமாகக் கொண்டும், பூசனிக்காய் போல் உடல் முழுதும் விபூதியைப் பூசிக்கொண்டும், என்றும் இளமைக்கோலத்துடனும், தலையில் கங்கையைத் தரித்துக்கொண்டும், காதுகளில் பாம்பைக் குண்டலமாக அணிந்துகொண்டும், நீலநிற கண்டத்துடனும் எங்கும் வியாபித்திருப்பவராகவும், ஸங்கீதத்தில் விருப்பமுடையவரும், பார்வதீ தேவியின் நாயகனும், ஆத்மானந்தமுடையவருமாக 'கல்ஹார ராக தேவதை விளங்குகிறார்.

காமந்த ராக த்யானம் :

எளிய அழகிய வேடமணிந்தும் மலையை விரும்பி அதில் வசிக்கின்றவரும், தண்டத்தைக் கையில் தரித்துக் கொண்டும் அந்தணனைப் போல் காட்சியளித்தும், அசை கின்ற விழிகளும், வித்யாதரர்களிடம் அன்பு கொண்டும், ஐந்து திருமுக மண்டலத்துடனும், சந்திரனைத் தலையில் அணிந்து கொண்டும், எளிமையான அழகிய இன்சொல் லுடனும், விபூதியைத் தரிப்பதில் மிகுந்த விருப்பங்கொண் டவரும், ரஜோகுணமுடையவரும், வேதத்தைப் பயில்வதில் விருப்பங் கொண்டவரும், சிறந்த அறிவாளியாகவும் விளங்குகின்ற காமந்த ராக தேவதை எங்களைக் காக்கட்டும்.

மேக ராகத்தின் பிள்ளைகள்

ஜனக ராகம்		ஜன்ய ராகம்
மேகராகம் x த்ரோடகீ	—	ஹம்ஸராகம்
மேகராகம் x மோடகீ	—	கடகண்டராகம்
மேகராகம் x அஹந்நடா	—	கோமலராகம்
மேகராகம் x அபரா	—	ரோஹக ராகம்
மேகராகம் x ப்ருஹன்நடா	—	வித்யுன்மாலா ராகம்
மேகராகம x மல்லரீ	—	மோதக ராகம்

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

உருவ அமைப்பு (த்யானம்)

ஹம்ஸ ராக த்யானம் :

வெண்ணிறமும், பாலைப் பருகுவதில் விருப்பமும், ஹம்ஸம் (அன்னப்பறவை) போன்ற உருவமும், இரு மருங்கும் இறக்கைகளுடனும் அழகிய கழுத்தும், அழகு நிறைந்ததும், விருப்பம் அதிகமாகவுள்ளதுமாக ஹம்ஸ ராக தேவதை விளங்குகிறார்.

கடகண்ட தியானம் :

தாமரை மலர் போன்ற மென்மையான நான்கு கைகளுடனும், குடத்தைக் கையில் ஏந்திக்கொண்டும், கவர்ச்சி பொருந்திய உடலும், அமைதியானவராகவும் கடகண்டராக தேவதை விளங்குகின்றார்.

கமல ராக த்யானம் :

தாமரை மலர்களை மாலையாக அணிந்துகொண்டும், தாமரை மலரில் வீற்றிருப்பவரும், தனது இரு கைகளிலும் தாமரை மலரை தரித்துக்கொண்டவரும், தாமரை போன்ற மென்மையான உடலுடனும், புருஷ லக்ஷணத்துடனும் கமல ராக தேவதை விளங்குகின்றார்.

ரோஹக ராக த்யானம் :

குதிரையை வாஹனமாக உடையவரும், கத்தியைக் கையில் தரித்தவரும், மஞ்சளாடையை உடுத்திக் கொண்டும், மக்களை உருவாக்குகின்றவரும், வெள்ளை நிறத்துடனும், ஆகாயத்தில் சஞ்சரிப்பவருமாக 'ரோஹக ராக தேவதை' பெரியோர்களால் கூறப்படுகிறார்.

வித்யுன்மால ராக த்யானம் :

மின்னல் போன்ற ஒளியும், நெடிய உருவமும், சஞ்சலமானவரும், புலாலை விரும்புகின்றவரும், வஜ்ரம் போன்ற

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

கைகளுடன் ப்ரகாசிக்கின்றவருமாக, 'வித்யுன்மாலா' ராகதேவதை கூறப்படுகிறார்.

மோதக ராக த்யானம் :

மகம் கொண்டவரும், தேன் பருகிய வண்டுகளால் மொய்க்கப்பட்டவரும், மதம் பிடித்த யானையை வாஹன மாக உடையவரும், மது நிறம்பிய பாத்திரத்தைக் கையி லேந்திக் கொண்டும் விளங்குகின்றவர் 'மோதக ராக தேவதை' எனப்படுகிறது.

நட நாராயண ராகத்தின் பிள்ளைகள்

ஜனகராகம்	ஜன்யராகம்
நடநாராயண ராகம் x வங்காலி	– பங்கால ராகம்
நடநாராயண ராகம் x ஸுத்த லலங்கா	– நாட ராகம்
நடநாராயண ராகம் x காம்போஜா	– காருட ராகம்
நடநாராயண ராகம் x மதுமாதவீ	– மோஹன ராகம்
நடநாராயண ராகம் x தேவக்ரீ	– ரமணீய ராகம்
நடநாராயண ராகம் x தேஹுலீ	– ப்ரமோத ராகம்

உருவ அமைப்பு (த்யானம்)

பங்கால ராக த்யானம் :

குழந்தைப் பருவத்தினரும், பிள்ளை விளையாடல் களைப் புரிகின்றவரும், அழகு பொருந்திய ஆடை அணிந்து கொண்டு, அழகாகக் காட்சி நல்குகின்றவர். குழந்தை களின் விளையாட்டை மிகவும் விரும்புகின்றவராகத் தோற்றமளிப்பவர் 'பங்கால ராக தேவன்',

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

நாட ராக த்யானம் :

அனேக நடர்கள் (நடனம் ஆடுகின்ற ஆடவர்) சூழப்பட்டவரும், இளைஞரும், வெண்மையான நிறமுடைய வஸ்திரம், மிகு அழகுடன் விளங்குபவரும், தாம்பூலத்தைக் கையில் தரித்துக்கொண்டும், புன்சிரிப்புடன் கூடியவரும் 'நாட ராகதேவன்' விளங்குகின்றார் என்று ரசிகர்களால் புகழப்படுகிறார்.

காருட ராக த்யானம் :

கருடனைப் போன்ற உருவமும், பாம்பைக் கையில் தாங்கிக்கொண்டும், சஞ்சலமானவரும், சிவந்த கண்களையுடையவரும், மஞ்சள் ஆடையை அணிந்துகொண்டும், அனைத்து ஆபரணங்களையும் அணிந்துகொண்டும் காட்சி கொடுப்பவர் 'காருட' என்னும் ராக தேவன்.

மோஹன ராக த்யானம் :

அழகனும், சிவந்த திருமேனியுடனும், வாலிபமான வரும்' பெண்களை வெல்லும் மன்மதன் போன்ற உருவமுடையவனாகவும் விளங்குகின்றவர் 'மோஹன' ராக தேவதை.

ரமணீய ராக த்யானம் :

அழகிய அங்கங்களையுடையவரும், நீலநிறமான ஆடை அணிந்தவரும், மஞ்சள் வண்ண மலர் மாலை அணிந்தவரும், அழகிய தோற்றத்துடன் கூடியவரும், எல்லா ராகங்களையும்விட விசேஷ அழகுள்ளவருமாக விளங்குபவர் 'ரமணீய' ராக தேவதை என்று கூறுகின்றனர்.

(c) Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

ப்ரமோத ராக த்யானம் :

மன்மதனைப் போன்ற அழகியதும், சுகத்தை நல்கும் உருவமும், திவ்யமான சரீரமும் தாமரையை விளையாட்டாகத் தாங்கிக்கொண்டும் முழு நிலவு போன்ற முகமும், ப்ரமோத ராக தேவதை விளங்குகிறார்.

சிவபெருமானின் ஐந்து முகங்களிலிருந்துந் தோன்றிய ராகங்கள்

ஸ்ரீராகமும், வஸந்த ராகமும் ஸத்யோஜாதம் என்னும் முகத்திலிருந்தும், பைரவ ராகம் ஈசானம் என்ற முகத்திலிருந்தும், பஞ்சமராகம் தத்புருஷம் என்ற முகத்திலிருந்தும், மேகராகம் அகோரம் என்ற முகத்திலிருந்தும், நடநாராயண ராகம் வாமதேவம் என்ற முகத்திலிருந்தும் தோன்றின.

மேலே கூறப்பட்ட ஆறு இராகங்களிலிருந்தும் முப்பாத்தாறு பிள்ளைகள் தோன்றின. அவற்றின் விளக்கம் முன்னர் கூறப்பட்டது. அந்த பிள்ளைகளுக்குரிய மனைவிகள் முப்பத்தாறு. அவர்களின் பெயர்கள் முறையே வருமாறு :-

1. நடா, 2. லங்கா, 3. ஸாநடா, 4. தைலங்கீ, 5. ஹம்பீரி, 6. லாங்குலீ, 7. துக்கவைராடீ, 8. கல்யாணீ, 9. வஸந்திகா, 10. தரங்கிணீ, 11. தேசிகரா, 12. நாத்ரா 13. ராமகிரி, 14. பகுலீ, 15. லீலாவதீ, 16. ஸைந்தவீ, 17. ஸொரடீ, 18. மாலினீ, 19. நவரோஜா, 20. பூபாலீ, 21. நாரீ, 22. நாராயணீ, 23. மாரு, 24. குரங்கமாலா, 25. துண்டீ, 26. மங்கள கௌசிகா, 27. விசி, 28. வேளா, 29. மாஹாலீ, 30. டொம்பீ, 31. மேகரஞ்ஜிகா, 32. ம்ருதசஞ்ஜீவிநீ, 33. நாகதன்வா, 34. ஸுதாமயீ, 35. த்ரிவளீ, 36. ப்ரேமவர்தினி.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

உருவ அமைப்பு (த்யானம்)

நடா ராக த்யானம் :

வெண்மையான அங்கங்களை உடையவளும், அழகும், குள்ளமான உருவமும், இனிமையான பேச்சும், சாமர்த்திய குணமும், இரண்டு கைகளிலும் குங்குமப்பூ கலந்த சந்தனத்தைப்பூசிக்கொண்டும், விளங்குகின்றாள் 'நடா' என்னும் ராக தேவதை.

லங்கா ராக த்யானம் :

கருப்பு நிறமும், நெடிய உருவமும், பருத்த கொங்கை யும், வாலிபமான வயதும், பெண்குயில் போன்ற குரலொலியும், தாம்பூலத்தைத் தரித்துக்கொண்டிருப்ப வளாக 'லங்கா' என்னும் ராக தேவதை திகழ்கிறாள் என அறிவாளிகள் கூறுவர்.

ஸௌநடா ராக த்யானம் :

மதங்கொண்டவளும், காமகேளிக்கையில் விருப்பங் கொண்டவளும், பொன் போன்ற வண்ணமும், சிரித்துக் கொண்டும், நடனமாடிக் கொண்டும், விளையாட்டாக தாமரை மலரைக் கையில் தரித்துக் கொண்டும் விளங்கு பவள் 'ஸௌநடா' என்னும் ராக தேவதை.

தைலங்கீ ராக த்யானம் :

வாசனைப்பூச்சு பூசிக்கொண்டும், வெண்மையான வண்ணமும், வைரம் போன்று வெள்ளை நிறமுடைய பற்களை யுடையவளும், குங்குமப்பூ கலந்த பூச்சை மேனி யில் பூசிக்கொண்டும், தலைக் கூந்தலை அழகுபட விரித்துக் கொண்டும், அரசர்களால் விரும்பப்படுகின்றவளுமாக 'தைலங்கீ' ராக தேவதை விளங்குகிறாள்.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஹம்பீரி ராக த்யானம் :

பசுமையான உருவமும், பச்சை வண்ண ஆடையை அணிந்துகொண்டும், ரத்தினமயமான சாதணியை அணிந்துகொண்டும், பருத்த கொங்கையும், மலர்க் கொத்தை தரித்துக்கொண்டும், மானிடத்தில் மிகுந்த விருப்பங்கொண்டும் 'ஹம்பீரி' என்னும் ராக தேவதை விளங்குகின்றாள்.

லாங்குலீ ராக த்யானம் :

கருத்த நிறமும், சிவந்த ஆடையும், பருத்த உடலும், மலர்க்கொத்துக்களை மாலையாக அணிந்துகொண்டும், அழகிய நகிலும், உடலில் ரோமங்கள் நிறைந்தவளாகவும், பர்ணசாலையில் வசிக்க விரும்புகின்றவளாகவும் 'லாங்குலீ' என்னும் ராக தேவதை விளங்குகின்றாள்.

துக்கவைராடிகா ராக த்யானம் :

அழகற்ற முகமும், பரிஹாஸப் பேச்சற்ற (சிரிப்பற்ற) வளாகவும், ஒல்லியான உருவமும், அழுக்கடைந்த உடலும், மிகச் சிறிய ஸ்தனங்களும், வாடிய முகமும் கொண்டவளாக விளங்குகின்றவள் 'துக்கவைராடிகா' என்னும் ராக தேவதை.

கல்யாணீ ராக த்யானம் :

மங்களம் பொருந்திய பேச்சும், சந்திரனை நிகர்த்த முகமும், புளகம் பொருந்திய அழகிய நகில்களும், நீலோத்பல மலரை கையில் தரித்துக்கொண்டும், கருமையான வண்ணத்துடனும், மானை வாஹனமாகக் கொண்டவளாக 'கல்யாணீ' ராக தேவதை விளங்குகிறாள்.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

வஸந்திகா ராக த்யானம் :

மது குடித்ததால் ஏற்பட்ட கர்வம் கொண்டவளும், மதிக்கத்தக்கவளும், சந்தன முல்லை மலரில் விருப்பங் கொண்டவளும், சந்தனத்தை உடலில் பூசிக்கொண்டவளும், அழகிய கொங்கையை யுடையவளுமாகத் திகழ்கின்றாள் 'வஸந்திகா' என்னும் ராக தேவதை.

தரங்கிணீ ராக த்யானம் :

சஞ்சலங்கொண்டவளும், அழகிய இடையும், கவர்ச்சி பொருந்திய ஆடை-அணிகளை அணிந்துகொண்டும், பருத்த கொங்கையுடனும், படகில் இருப்பவளுமாக தரங்கிணீ ராக தேவதை விளங்குகின்றாள்.

தேசிகரா ராக த்யானம் :

நாகரிக மிக்கவளாகவும், மக்களால் விரும்பத்தக்க அழகுடையவளும், குதிரை மேல் ஆரோகணித்திருப்பவளும், தாம்பூல பட்டிகை (பீடா) யைத் தரித்துக்கொண்டும் 'தேசிகரா' ராக தேவதை விளங்குகிறாள்.

நாதா ராக த்யானம் :

அரசகுலப் பெண் போலக் காட்சி தருபவளும், மலர் போன்ற மென்மையுடையவளும், அழகிய இடையுடனும், தெளிவான அழகிய பேச்சுடையவளும், மனிதர்களால் தலைவி என்று அழைக்கப்படுகின்றவளாகவும் திகழ்கின்றவள் 'நாதா' என்னும் ராக தேவதை.

ராமக்ரியா த்யானம் :

யக்ஷிணியானவளும் (தேவர்களில் ஒரு பிரிவினர் யக்ஷர்கள்) தாமரை போன்ற முக மண்டலமும், யக்ஷர்-கின்னரர் போன்றோருக்கும் கிடைத்தற்கரியவளும், வீணையைக் கையில் தரித்தவளும், மலைகளில் வசிப்பவளும் 'ராமகிரி' என்னும் ராக தேவதை என்றும் அறிஞர்கள் புகழ்கின்றனர்.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

பஹுலீ ராக த்யானம் :

வெண்ணிறமுடையவளும், கிண்கிணி போன்ற இனிய ஒலியை யுடையவளும், தங்கக் கலசம் போன்ற கொங்கை களையுடையவளும், அழகிய நாபி பிரதேசத்தையுடைய வளும் தாமரை இதழ் போன்ற கண்களை உடையவளும் பசுவினிடம் மிகுந்த விருப்பங்கொண்டவளுமாக 'பஹுலீ' என்னும் ராக தேவதை திகழ்கின்றாள்.

லீலாவதீ ராக த்யானம் :

மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பவளும், சங்க வாத்யம் வாசிப்பதில் விருப்பமுள்ளவளும், அழகிய (முகவாய் கட்டையை) தாடையை யுடையவளாகவும் விளங்குகிறாள் லீலாவதி என்னும் ராக தேவதை.

ஸைந்தவீ ராக த்யானம் :

கவர்ச்சி பொருந்தியவளும், சாமரையைக் கையில் தரித்துக்கொண்டும், வாழை மரங்கள் சூழ்ந்திருப்பவளும், அழகிய கொங்கைகளை யுடையவளும், இளவயதினளும், பாம்பிடம் பிரியங்கொண்டவளுமாகத் திகழ்கின்றவள் ஸைந்தவீ என்னும் ராக தேவதை.

ஸௌரடீ (சுரட்டி) ராக த்யானம் :

பருத்த நிதம்பத்தை யுடையவளும், ஆழ்ந்த பாதக் குரடுகளை யுடையவளும், வட்டமான நகில்களையுடைய வளும், பெண்களிடம் பிரியம் கொண்டவளும், மா-பாதிரி ஆகிய மரங்களின் மத்தியில் வசிப்பவளும், கின்னரீ வாத்தியத்தின் இனிய ஒலியை யுடையவளுமாக 'ஸௌரடி' ராக தேவதை விளங்குகின்றாள்.

மாலினீ ராக த்யானம் :

அதிக மலர்களைக் கொண்டவளும், வசீகரமடையும் தோற்றமும், துளஸி மாலையை அணிந்துகொண்டும்,

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

கையில் மலர்க்கொத்தை வைத்துக்கொண்டிருப்பவளுமாக மாலினி என்னும் ராக தேவதை திகழ்கிறாள்.

நவரோஜா ராக த்யானம் :

மனதைக் கவர்ந்துகொள்ளும் பேரழகையுடையவளும், தங்கமயமான அணிகளை அணிந்துகொண்டவளும், தாம்பூலம் தரித்துக்கொண்டு முழுநிலவு போல் திகழும் முகமும், திவ்யமான மாம்பழம் போன்ற நகிலையுடையவளுமாகத் திகழ்கின்றாள் நவரோஜா என்னும் ராக தேவதை.

பூபாலீ ராக த்யானம் :

தாய்மையான சாத்விக குணமுடையவளும், பால் போன்ற தூய வெண்மை நிற ஆடையை அணிந்திருப்பவளுமான பூபாலீ ராக தேவதையை ராக ஞானத்தை அடைந்தவர் மற்றும் அடைய விரும்புவோர் எப்பொழுதும் அதிகாலையில் (பாடி) வழிபடவேண்டும்.

நாரீ ராக த்யானம் :

மக்களை மோஹிக்குமாறு செய்பவளும், பல்வேறு ஒலிகளைக் கொண்டவளும், கின்னரீ என்னும் வாத்யத்தை மீட்டுவதில் சிறந்தவளும், தினமும் நகரத்தில் வஸிப்பவளுமாக 'நாரீ' ராக தேவதை விளங்குகின்றாள்.

நாராயணீ ராக த்யானம் :

துளஸி மாலையை அணிந்தவளும், நீருண்ட மேகம் போன்ற கருமை நிறமும், மான் பார்வை போன்ற மருண்ட பார்வையும், சங்கு, சக்கரம், கதை, தாமரை ஆகியவற்றைக் கைகளில் தரித்துக்கொண்டு நாராயணீ என்னும் ராக தேவதை விளங்குகின்றாள்.

மாரு ராக த்யானம் :

செல்வத்தில் விருப்பமுடையவள், இரக்கமற்றவள், ஆனால் கருணையுடையவள், ஒட்டிய வயிறும், விவேக

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

மற்றவளும், அமைதியானவளும், பயத்துடன் கூடியவளும், கருணை தவழும் முகமும் கொண்டவள் 'மாரு' என்னும் ராக தேவதை.

குரங்கமாலினீ ராக த்யானம் :

குரங்கமாலினியை த்யானம் செய்வோர் மான்களின் மத்தியில் பாடுவார்களேயானால் அந்த மான்களின் மனம் உறுதியாக மோஹிக்கும்; காமத்தின் வசப்படும் தன்மையைப் பெறும். (இதில் உருவ அமைப்பு மூல நூலில் இல்லை.)

துண்டீ ராக த்யானம் :

பாம்பிடம் ஈடுபட்டவளும், (தாமிரம்) செம்பு வண்ணத்தையுடையவளும், வாஸனைப் பொருளான கஸ்தூரியை விரும்புகின்றவளும், அழகிய உடலும், அழகிய கண்களும், அழகிய தனங்களுடனும் விளங்குகின்றாள் துண்டீ ராக தேவதை.

மங்கள கௌசிக்யா ராக த்யானம்:

அனைத்து மங்களங்களையும் தரக்கூடியவளாகவும், இனிமையான குரலுடைய உத்தமமானவளும், பச்சைக் கர்ப்பூரம் போன்ற மணமுள்ளவளும், அழகிய அங்கங் களைக் கொண்டவளாகவும் மங்கள கௌசிக்யா ராக தேவதை விளங்குகிறாள்.

வீசிகா ராக த்யானம் :

சஞ்சரிக்கும் அங்கங்களும், அழகிய விழிகளும், நீல ஆம்பல் போன்ற போன்ற உடல் வண்ணமும், ஒல்லியான உடலும், தாமரை மொட்டுப் போன்ற கொங்கைகளையும் கொண்டவள் வீசிகா என்னும் ராக தேவதை.

வேளா ராக த்யானம் :

விருப்பமுடைய பலத்த ஒலியை (சத்தமாகப் பேசக் கூடியவள்)யுடையவளும், முத்துமாலையை அணியாக

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

உடையவளும், அழகிய இடையில் ஒட்டியாணம் அணிந்து கொண்டும், பரந்த இதயங்கொண்டவளுமாக வேளா ராக தேவதை விளங்குகிறாள்.

மாஹூலி ராக த்யானம் :

சங்கை கையில் தரித்துக்கொண்டும், மணங்கமழும் அழகிய கூந்தலை யுடையவளும், மாதுளை மலர் போன்ற வண்ணமுடைய உதட்டையுடையவளும், சிறிய அளவுள்ள கொங்கையுடையவளும், சங்கு போன்ற கழுத்தையுடைய வளும். ஒளிபொருந்தியவளாகவும் மாஹூலி ராக தேவதை விளங்குகின்றாள்.

டோம்பீ ராக த்யானம் :

கருமை நிறமுடையவளும். நெடிதுயர்ந்த உருவமும், அசைகின்ற விழிகளும், குடம் போன்ற தனங்களும், காகத்தின் குரல் போன்ற குரலையுடையவளும், கழுதை களால் சூழப்பட்டவளும், மது குடிப்பதால் மயங்கிய நிலையில் காட்சி கொடுப்பவளாக டோம்பீ என்னும் ராக தேவதை விளங்குகின்றாள்.

மேக ரஞ்ஜிகா ராக த்யானம் :

அழகிய நாபியை யுடையவளும், மங்கள்கரமான் ஆடையை யுடுத்திக்கொண்டும். மின்னலுடன் கூடிய இடியைப் போன்றவளும், தளிர் போன்ற கைகளையுடைய வளும். தூய்மையான புன்சிரிப்புடனும் விருப்பத்தை பூர்த்தி செய்பவளுமாக மேகரஞ்ஜிகா (மேகத்வனி) ராக தேவதை விளங்குகின்றாள்.

ம்ருத சஞ்ஜீவினீ ராக த்யானம் :

அழிவற்ற ஆனந்தத்துடன் கூடியவளும், நான்கு கைகள், வட்டமான தனங்கள், தேவர்களுக்கு மகிழ்வை நல்குகின்றவளுமாக ம்ருதசஞ்ஜிவினீ என்னும் ராக தேவதை விளங்குகின்றாள்.

CC-0.TSarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

நாகதன்வா ராக த்யானம் :

... ... பரந்த நோக்குர். இளமைப் பருவமுர், ஆழ்ந்த நாபியும். அழகிய நகிலுடனும் காட்சியளிப்பவள் நாகதன்வா ராக தேவதை.

சுதாமயீ ராக த்யானம் :

அமிர்தம் போல் ராகத்தைப் (வர்ஷிக்கின்றவளுள்) பொழிகின்றவளும், மது குடிப்பவளுர், மதுக்குடத்தை கையில் ஏந்தியவளும், இனிமையானவளுமாக இருப்பவள் சுதாமயீ ராக தேவதை

த்ரீவளீ ராக த்யானம் :

வயிற்றில் மூன்று மடிப்புகளுள்ளவளும், மூன்று முகங்களும், மூன்று பாதங்களும், மூன்று ஸ்வரங்களை ஆதாரமாக உடையவளும், மூன்று தனங்களையும், மூன்றுவித நிறங்களையும், கருத்த மேனியையுர். ஆசையை யுண்டாக்குகின்றவளாகவும் த்ரிவளீ ராக தேவதை விளங்குகின்றாள்.

ப்ரேமவர்த்தினீ என்ற ராக தேவதையின் குறிப்பு சுவடியிலில்லை.

பலசுருதி :

இந்த ராக தேவதைகளைக் குறித்து அறிந்தவர்கள் கந்தர்வர்களைப் போல பாடும் ஞானத்தை அடைவர்.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

சரசுவதி மகால் நூலக அச்சகம்